# அன்பான பெற்றோர்களே,

உங்களுக்குக் குழந்தை பிறந்ததற்கு எம் வாழ்த்துக்கள்! இந்த «முதற்புத்தகம்» என்ற திட்டத்தின் வழியாக உங்களையும் உங்கள் குழந்தையையும் மொழியுலகத்தினுள் இணைந்து பயணிப்பதற்கு அழைத்துச்செல்கிறோம். நீங்கள் உங்கள் குழந்தை பிறந்ததிலிருந்தே அதனுடன் கதைப்பதையும், கதைகள் சொல்வதையும், புத்தகங்களை வாசித்துக் காட்டுவதையுமிட்டு அது மிகவும் மகிழ்வடைகிறது.
அதனாலேயே சுவிஸ்நாட்டில் புதிதாகப் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் «முதற்புத்தகப் பரிசுப்பெட்டி» யை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்கிறது. இதன் மூலம் உங்களுக்கு இனிய அனுபவங்கள் வாய்க்க எம் வாழ்த்துக்கள்!

## ஒன்றாக மொழியையும், கதைகளையும் கண்டறிதல்

படப் புத்தகங்களை ஒன்றாகப் பார்ப்பதென்பது உங்களுக்கும் குழந்தைக்குமிடையிலான உறவில் ஒரு நேர்மறையான விளைவை ஏற்படுத்துகிறது. யார் குழந்தைகளுக்கு வாசித்துக்காட்டுகிறார்களோ, அவர்கள் நேரத்தையும், நெருக்கத்தையும், இரக்கத்தையும் பரிசளிக்கிறார்கள். குழந்தைகள் இத்தருணங்களை நேசிக்கிறார்கள்! வாசித்துக் காட்டுதல் கற்பனைத் திறனைத் தூண்டுகிறது! இதன்போது குழந்தை மொழியையும், உலகையும் இலகுவாகக் கண்டறிகிறது. சிறுவயதிலிருந்து  கிரமமாக வாசித்துக்காட்டி வளரும் குழந்தைகள் பொதுவாக அதிகளவிலான சொல்வளத்தையும், இலகுவாக வாசிக்கும் திறனும் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

## புத்தகங்களுடன் வளருதல்

கீழ்க்காணும் குறிப்புக்கள் உங்கள்  குழந்தை எந்தவயதில் எவ்வாறான ஆர்வங்களைக் கொண்டுள்ளது என்பதையும், நாளடைவில் எவ்வாறான திறன்களை வளர்த்தெடுக்கிறது என்பதையும் பொதுவாகக் கூறுகின்றன. இத்தகவல்கள் எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுவானவை அல்ல. இவை ஒவ்வொரு குழந்தைக்கும் மாறுபடும்.

### 6 மாதங்கள்

குழந்தை புத்தகத்தைப் பிடித்திருக்க விளைவதோடு கடித்தும் பார்க்கும். தன் கையிலுள்ள அந்தப் பொருளைத் தன்னால் சாப்பிட முடியுமா என்றும், எப்படி அந்தப் புத்தகம் சுவைக்கிறது, அதன் வடிவமும் தன்மையும் அதற்குப் பிடித்திருக்கிறதா, அது ஒலி எழுப்புகிறதா அல்லது வித்தியாசமான மணத்தைக் கொண்டதாகவிருக்கிறதா என்றும் அறிய விரும்பும்.

### 12 மாதங்கள்

இப்பொழுது உங்கள் குழந்தை தன் கையிலுள்ளதைக் கவனமாகத் தொட்டுணர்கிறது. அது ஒரு புத்தகம் என்பதை அறிந்துகொள்கிறது. தன்னோடு அந்தப் புத்தகத்தைச் சேர்ந்து வாசித்துக்காட்டும் பெரியவர்களையிட்டு மகிழ்வடைகிறது. உங்கள் குழந்தை படங்களை இனங்காணவும், சிலவேளைகளில் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது தன் கைகளைத்தட்டியும் மகிழும். படங்கள் நேராகவுள்ளனவா அல்லது தலைகீழாகவுள்ளனவா என உணர்ந்துகொள்ள ஆரம்பிக்கும்.

### 18 மாதங்கள்

இப் புத்தகம் உங்கள் குழந்தைக்கு ஒரு நம்பிக்கைக்குரிய பொருளாகிவிட்டது. அதை எப்பொழுதும் தன்னோடு காவித் திரிவதோடு பக்கங்களை விரித்துப்பார்த்துத் தன் விரல்களால் ஒரு படத்தைத் தொட்டுக்காட்டும். படங்களை எப்படி வைத்துப் பார்ப்பது என்பதை அறியும். இருந்தபோதும் எல்லா நேரங்களிலும் புத்தகத்தைச் சரியாகப் பிடித்து வைத்திருக்காது. நீங்கள் அதற்குப் புத்தகத்தை வாசித்துக்காட்ட வேண்டுமென்று விரும்பும். அதைத் தனக்கேயுரிய விதத்தில் உங்களுக்குத் தெரிவிக்கும்.

### 24 மாதங்கள்

உங்கள் பிள்ளை புத்தகத்தை ஒவ்வொரு பக்கமாக விரித்துப் பார்க்கும். படங்களைப்பார்த்து அவற்றின் பெயர்களைச் சொல்லும். நீங்கள் தொடங்கும் வரிகளை முழுமைப்படுத்தி முடித்துவைக்கும். தான் கேட்ட கதையின் சிறு பகுதியைத் திருப்பிக் கூறும். இந்த வயதில் உங்கள் குழந்தையால் மேலும் அதிக நேரம் கவனம் செலுத்த முடியும். தன்னுடைய பொம்மைகளுக்கும், பூனைக்கும் வாசித்துக் காட்டுவதோடு தானாகக் கதைகளை இயற்றியும் கூறும்.

### 36 மாதங்கள்

குழந்தைக்குப் புத்தகத்தைச் சரியான முறையில் கையாளத் தெரியும். நீங்கள் வாசித்துக்காட்டும் பொழுது மிகக் கவனமாகக் கேட்பதோடு சிறிய பிழைகளையும் கவனிக்கும். புத்தகத்தை தனக்காக வாசிப்பதோடு தனக்கு அதிகம் விருப்பமான பக்கங்களையும் தேடிப் பார்க்கும்.

### பின்னர்

இப்பொழுது மிகச் சிறந்த அவதானிக்கும் திறன் கொண்டதாக இருக்கிறது. பொருட்களை விபரிக்கத் தெரியும். நீங்கள் சொல்லிக்காட்டிய கதைகளை, வாசித்துக்காட்டியவற்றை நினைவு படுத்தும். அனேகமாகத் தான் கேட்பவற்றைத் தன் சொந்த வார்த்தைகளால் மீண்டும் மீண்டும் சொல்ல விரும்பும். உரையாடல்களைத் தூண்டும் கேள்விகளைத் தன்னிடமும் உங்களிடமும் கேட்டுத் தொடர்ந்து கதைப்பதற்கு வழிசமைக்கும்.

## உங்கள் நாளாந்தக் குடும்ப வாழ்வில் புத்தகங்கள்

உங்கள் குழந்தையுடன் ஒரு புத்தகத்தைக் கண்டெடுக்கத் தேவையான நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் குழந்தைக்கு புத்தகத்திலுள்ள படங்களைப் பொறுமையாகப் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுப்பதோடு, அதன் ஆர்வத்தைக் கருத்திற்கொண்டு அணுகுங்கள். குழந்தைக்கு தானாகவே பக்கங்களைப் புரட்டவும், கேள்விகளைக் கேட்கவும், உங்களுடன் தன் கருத்துக்களைப் பகிரவும் வாய்ப்புக் கொடுங்கள்.

## நூலகத்திற்கு வரவேற்கிறோம்

நூலகத்தில் உங்களுக்காக, நீங்களும் உங்கள் பிள்ளையும் ஒன்றாகக் கண்டு பிடிப்பதற்காக புத்தகங்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. பல நூலகங்களில் குழந்தைகளுக்கான நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அங்கே ஒன்றாகச் சேர்ந்து பாட்டுப்பாடி, கவிவரிகளை ஒப்பிவித்து, கதைகளும் வாசித்துக்காட்டப்படுகின்றன. நீங்களும் அவற்றில் கலந்து கொண்டு பயன்பெறுவதோடு ஊக்கமும் பெறுங்கள்.

## இத்திட்டத்தின் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

இத்திட்டத்தை Bibliomedia மற்றும் Schweizerisches Institut für Kinder- und Jugendmedien SIKJM அமைப்புகள் இணைந்து சுவிஸ் நாடு முழுவதும் முன்னெடுக்கின்றன.

www.bibliomedia.ch

www.sikjm.ch, www.isjm.ch, www.ismr.ch

மேலதிக விபரங்களுக்கு: www.buchstart.ch, www.nepourlire.ch, www.natiperleggere.ch

**Tamilisch/Tamoul/Tamil**

Buchstart
Né pour lire
Nati per leggere